# 2 கண்ணன் செய்த உதவி



கதிரவனின் ஒளி எங்கும் படர்ந்திருந்தது. பறவைகள் ஒலியெழுப்பிப் பறந்தன. காலை வேளையில் கண்ணன் பள்ளிக்குப் புறப்பட்டான். அவன் செல்லும் வழியில் ஒரு பெரியவரைப் பார்த்தான். அந்தப் பெரியவர் "சாலையைக் கடக்க உதவ வேண்டும்" என்று அவனிடம் கேட்டார்.



"வாருங்கள் போகலாம்" என்று கூறிய கண்ணன், அவரது கையைப் பிடித்துக்கொண்டு பாதுகாப்பாக எதிர்ப்புறத்தில் விடுவதற்குச் சென்றான். அப்போது எதிரே ஒரு பேருந்து வேகமாக வந்தது. ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த அந்தப் பேருந்து பக்கத்தில் இருந்த மரத்தில் மோதியது. உடனே கண்ணன் கத்தினான்.

அறிந்த தகவல்களையும், செய்திகளையும் சரியான ஒலிப்புடன் தங்கு தடையின்றிக் கலவைத் தொடரில் பேசுதல்...

என்ன செய்வது என்று தெரியாமல் "ஐயோ காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள்" என்று உரக்கக் கத்தினான், உடனே அந்தப் பெரியவர் தம் பையிலிருந்து செல்பேசியை எடுத்தார். பின் 108 என்ற எண்ணிற்குத் தொடர்பு கொண்டு பேசினார். அடுத்த சிறிதுநேரத்தில் அவசர ஊர்தி வந்தது. காவலர்களும் வந்தனர். பேருந்தில் காயம் அடைந்தவர்களை மருத்துவமனையில் சேர்த்தனர்.




இதனைப் பார்த்த கண்ணன் பேருந்தில் இருந்தவர்களுக்குத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்தான். அதன்பிறகு பள்ளிக்குச் சென்றான். ஆசிரியர் கண்ணனைப் பார்த்து "ஏன் தாமதமாக வருகிறாய்?" எனக் கேட்டார்.



கண்ணன் நடந்தவற்றைத் தெளிவாகக் கூறினான். ஆசிரியர் அவனைப் பாராட்டினார். கண்ணன் மகிழ்ச்சியடைந்தான்.

"மாணவர்களே! நீங்களும் உங்களால் முடிந்த உதவியைப் பிறருக்குச் செய்ய வேண்டும். அதுவே மகிழ்ச்சியைத் தரும்" என்றார். மாணவர்கள் அனைவரும் கையைத் தட்டி கண்ணனுக்குப் பாராட்டு தெரிவித்தனர்.



## வாங்க பேசலாம்

- கண்ணனைப் போல நீ யாருக்காவது உதவி செய்திருக்கிறாயா? உனது அனுபவத்தைக் கூறு
- உனது ஊரில் 108 வாகனத்தைப் பார்த்திருக்கிறாயா?. எதற்காக வந்தது? கலந்துரையாடு.



## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. **கதிரவன்** இச்சொல் உணர்த்தும் பொருள் ................

   (அ) சந்திரன் (ஆ) சூரியன்
   (இ) விண்மீன் (ஈ) நெற்கதிர்

2. **மகிழ்ச்சியடைந்தான்** இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................................

   (அ) மகிழ்ச்சி + அடைந்தான் (ஆ) மகிழ்ச்சி + யடைந்தான்
   (இ) மகிழ்ச்சியை + அடைந்தான் (ஈ) மகிழ்ச்சியை + யடைந்தான்

3. **ஒலியெழுப்பி** இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............................

   (அ) ஒலி + யெழுப்பி (ஆ) ஒலி + எழுப்பி
   (இ) ஒலியை + யெழுப்பி (ஈ) ஒலியை + எழுப்பி

SFDBR8

### பொருத்தமான குறியிடுக. (✓) சரி, (×) தவறு.

1. கண்ணன் பெரியவருக்குச் சாலையைக் கடக்க உதவினான். ☐
2. கண்ணன் பள்ளிக்கு நேரத்தோடு வந்து விட்டான். ☐
3. பெரியவர் செல்பேசியில் 107ஐ அழைத்தார். ☐
4. ஆசிரியரும் மாணவர்களும் கண்ணனைப் பாராட்டினர். ☐

# அகர முதலியைப் பார்த்துப் பொருள் வேறுபாடு அறிக

1. ஒலி: ..............................................

2. ஒளி: ..............................................






3. பள்ளி: ..............................................

4. பல்லி: ..............................................



5. காலை: ..............................................

6. காளை: ..............................................



### சரியான சொல்லால் நிரப்பிப் படி

1. ஒட்டகச்சிவிங்கி மிகவும் __________.
2. அதன் கழுத்து __________ இருக்கும்.
3. ஒட்டகச்சிவிங்கிக்குக் குரல்நாண் இருந்தாலும் அதனால் சத்தம் போட்டு __________ முடியாது.
4. ஒரு சிங்கத்தையே காலால் தாக்கிக் கொல்லும் அளவுக்கு __________ வாய்ந்தது.
5. ஒட்டகச்சிவிங்கி __________ தின்னும்.

(வலிமை, கத்த, இலைதழைகளைத், நீளமாக, உயரமானது)

## வினாக்களுக்கு விடையளி

1. கண்ணன் எங்குப் புறப்பட்டான்?

2. பள்ளி செல்லும் வழியில் கண்ணன் யாரைப் பார்த்தான்?

3. பேருந்து எதில் மோதியது?

4. பெரியவர் எந்த எண்ணிற்குச் செல்பேசியில் பேசினார்?

5. ஆசிரியர் கண்ணனை எதற்காகப் பாராட்டினார்?

## உன்னை அறிந்துகொள்


நீ உன் வீட்டில் யாருக்கு என்ன உதவிகளைச் செய்கிறாய்? வகுப்பறையில் கலந்துரையாடு.


# சொல் விளையாட்டு

வாத்தில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக.

எ. கா: நகை

1.
2.
3.
4.
5.
6.








**சிந்திக்கலாமா?**

அகில் பள்ளியில் படிக்கும் சிறுவன். அவனுக்கு உயிர்களிடத்தில் அன்பு காட்டுவதும் பிறருக்கு உதவி செய்வதும் பிடிக்கும். ஆனால் அவன் பெற்றோர்கள், அகில் சிறுவன் என்பதால், அவனுக்கு ஆபத்து ஏதேனும் ஏற்பட்டு விடுமோ என்று பயப்படுகின்றனர்.

அவர்களின் பயம் சரியானதா?
இல்லையா? ஏன்?